திரம் அல்ல, 1967லிருந்தே அந்தக் கட்சிகளிடமிருந்து கேட்கப்பட்டு வருகிறது. இப்போது விவரங்கள் கையில் இல்லே. அந்தக் கட்சிக் காரர்கள் தருவதாகச் சொல்லியிருக்கிருர்கள். ஆனால் எதுவும் தரவில்லே.

திரு. டி. சந்தோஷம்: தலேவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் படித்த விதிமுறைகளிலே பிரதமரின் வருகையைப் பற்றித் தான் வந்திருக்கிறது. அதே விதிமுறைகள் மற்ற மத்திய அமைச்சர்கள் வந்தாலும் பொருந்துமா அல்லது அவர்களுக்கு என்று தனியாக ஏதாவது விதி முறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: தலேவரவர்களே, இது பிரதமர் அவர்களுடைய வருகைக்காக மாத்திரமே அமைக்கப்பட்ட விதி முறைகள். அந்த விதி முறைகள் தான் மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலேவரவர்களே, மாநில அமைச்சர் வேறு மாநிலங்களுக்கு தேர்தலுக்காகச் சென்ருல் ஏற்படக்கூடிய செலவுகளே அங்கே இருக்கின்ற மாநில அரசுகள் ஒப்புக்கொள்ளக்கூடிய விதி முறை கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: தலேவரவர்களே, அப்படி எதுவும் இல்லே. அங்கே சென்ருல் நாமே தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது நம்முடைய விதி.

Increased Pay to Part-time Water Carriers.

***163 Q. THIRU D. SANTOSHAM: —Will the Hon. the Chief Minister be pleased to state—**

(a) whether part-time Water Carriers in Government Offices have been recommended an increased pay of Rs. 30 per month by the Second Tamil Nadu Pay Commission; and

(b) if so, whether the same has been implemented ?

பகுதி நேர நீர் வழங்குவோருக்கு உயர்த்தப்பட்ட ஊதியம்.

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசு அலுவலகங்களிலுள்ள பகுதி நேர நீர் வழங்குவோருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் உயரிய சம்பளம் வழங்கிட தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது செயற்படுத்தப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: (அ) இல்லே.

(இ) இவ்வினு எழவில்லே.

திரு. டி. சந்தோஷம்: தலேவரவர்களே, ஒருவேளே அவர்கள் மிகக் கொஞ்சம் பேர்களாக இருப்பதனுலேயே அவர்களுடைய கோரிக்கையை கவனிக்காமல் விட்டிருக்கலாம். மற்ற ஊழியர்களுக்குச் சம்பளம்

உயர்த்தப்பட்டிருக்கிறது, அவர்களுடைய சம்பளம் மிகக் குறைவாக இருக்கின்றது. ஆகவே அவர்களுக்குக் குறைந்த பட்சம் ரூ. 30 ஆவது வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர்கள் எல்லாம் பகுதி நேர ஊழியர்களாகப் பணியாற்றுகின்ற காரணத்தால், குழு அவர்களைப்பற்றி எந்தப் பரிந்துரையும் செய்யவில்லை என்பது உண்மைதான். 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் அவர்கள் பணியாற்றியிருப்பார்களானால், அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்குவதை அரசு பரிசீலிக்கலாம் என்கின்ற கருத்தை மாத்திரம் ஊதிய ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கின்றது. அதற்கு மேல் வேறு எந்தப் பரிந்துரையும் இல்லை.

Arabic Munshis appointed in the Government Elementary Schools.

* 164 Q. THIRU K. ARIVAZHAGAN (on behalf of THIRU M. SANKARALINGAM): —Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Arabic Munshis, appointed in the Government Elementary Schools in Kanyakumari District have represented that their services have not been regularised even though they have put in a service of ten years; and

(b) if so, the action taken thereon by the Government ?

அரசு தொடக்கப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட அரபிக் முன்ஷிகள்.

திரு. க. அறிவழகன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட அரபிக் முன்ஷிகள், பத்து வருடப் பணிக்காலமாகியும் அவர்களது பணியை வரன்முறைப்படுத்தப்படவில்லை என முறையீடு செய்துள்ளனரா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரபிக் முன்ஷிகள் (தரம் II) பதவிகளுக்கு விதிகள் இல்லாமையால் அவர்களது பணியினை இதுவரை வரன் முறைப்படுத்த இயலாதிருந்தது. அரசு இப்பொழுது மேற்படி பதவிகளுக்கு விதிகள் வெளியிட்டு அவர்களது பணியினை வரன் முறைப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி ஆணையிட்டுள்ளது.